

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.7.2025) மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், 271 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 54,461 பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆர். சுதா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம். பன்னீர்செல்வம், நிவேதா எம். முருகன், எஸ்.ராஜ்குமார், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஹெச்.எஸ். ஸ்ரீகாந்த், தாட்கோ தலைவர் இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருமதி துர்கா ஸ்டாலினின்

# ‘அவரும் நானும்’ பாகம் - 2 நூல் வெளியீட்டு விழா!

## சுப்ரியா சுலே எம்.பி. வெளியிடுகிறார் ! முதல் நூலை எழுத்தாளர் சிவசங்கரி பெறுகிறார்!

**சென்னை, ஜூலை.18-**

**முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் துணைவியார் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களின் ‘அவரும் நானும்’ பாகம் - 2 நூல் வெளியீட்டு விழா உயிர்மை பதிப்பகம் சார்பில் நாளை (19-7-2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை-கோட்டூர்புரம்- அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறுகிறது.**

இவ்விழாவில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., வரவேற்புரையாற்றுகிறார்.

கவிஞர் மனுஷ்ய புத்திரன், பதிப்பாளர் உரையாற்றுகிறார்.

பத்திரிகையாளர் திருமதி. லோக நாயகி, நூல் அறிமுக உரையாற்றுகிறார்.

இந்நூலை தேசிய வாத காங்கிரஸ் கட்சியின் (எஸ்.பி.,) செயல் தலைவரும், அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான திருமதி. சுப்ரியா சுலே எம்.பி. வெளியிடுகிறார்.



முதல் நூலை எழுத்தாளர் திருமதி. சிவசங்கரி பெறுகிறார்.

இவ்விழாவில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மேல் முறையீட்டு ஆணையத் தலைவரும் - மேனாள் நீதியரசருமான திருமதி பவானி சுப்பராயன், ‘டாபே’ குழுமம் நிர்வாக இயக்குனர் - தலைவர் திருமதி. மல்லிகா சீனிவாசன், கோவை சந்திரா-ஜி.ஆர்.ஜி. நிறுவனங்களின் தலைவர் முனைவர் நந்தினி ரங்கசாமி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

விழாவில் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் ஏற்புரையாற்றுகிறார்.

‘உயிர்மை’ இதழின் நிர்வாக ஆசிரியர் செல்வி ராமச்சந்திரன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில், மாலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை கலைமாமணி ராஜேஷ் வைத்யாவின் வீணை இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

### கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில்

# தலைவர்களின் 6 திருவுருவச் சிலைகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

கடலூர், ஜூலை 18-

கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.7.2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், லால்புரத்தில் ஐயா எல். இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையையும், சிதம்பரத்திலுள்ள பேட்டை, அம்பேத்கர் நகரில் புதுப்பிக்கப்பட்ட புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலையையும், மயிலாடுதுறை மாவட்டம், செம்பிருப்பு கடைவீதி பகுதி, கொள்ளிடம் புறவழிச்சாலை மற்றும் மயிலாடுதுறை மாவட்ட கழக தலைமை அலுவலகத்தின் புதுப்பிக்கப் பட்ட அண்ணா பகுத்தறிவு மன்றம் ஆகிய மூன்று இடங்களில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளையும் திறந்து வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (16.7.2025) மயிலாடுதுறை மாவட்டம், வழுவூர் முகப்பு சாலையில் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில்மேற்கொண்டசுற்றுப்பயணத்தின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நான்கு திருவுருவச் சிலைகள், புரட்சியாளர் அம்பேத்கர் மற்றும் ஐயா எல். இளையபெருமாள் ஆகியோரின் திருவுருவச் சிலைகள் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### அண்ணா, கலைஞர், தளபதி வழியில் கண்ணியம் காத்து

# பெருந்தலைவர் காமராஜர் மீது பெருமதிப்பு கொண்டவன் நான்!

## துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., அறிக்கை!

*சென்னை, ஜூலை.18-*

அண்ணா, கலைஞர், தளபதி வழியில் கண்ணியம் காக்கும் கடமை கொண்ட கழகத் தொண்டனான நான், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மீது மிகுந்த மரியாதையும், பெருமதிப்பும் கொண்டுள்ளேன் என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அறிக்கை வருமாறு :-

பெருந்தலைவர் காமராசரின் புகழுக்குக் களங்கம் விளைவிக்கும் தன்மையில் நான் பேசியதாகக் கருத்து கொண்டு விவாதங்கள் வலுத்துக் கொண்டு வருகின்றன. நான் எதிர்வரிசையில் இருக்கும் தலைவர்களைப் பற்றிப் பேசும்



போதுகூட கண்ணியத்தோடு விமர்சிப்பதைப் பலரும் அறிவார்கள்.

கல்விக்கண் திறந்த காமராசர் என்றும், மதிய உணவுத் திட்டத்தின் மூலமாக ஏழை வீட்டுப் பிள்ளைகள் கல்வி கற்க பள்ளிக்கூடம் வருவதற்கு இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் என்பதையும் பல மேடைகளில் உருக்கமாகவும், உணர்ச்சிகரமாகவும் நான் பேசுவது வழக்கம்.

“குணாளா! மணாளா! குலக்கொழுந்தே! குடியாத்தம் சென்று வா! வென்று வா!” என்று எழுதிய பேரறிஞர் அண்ணா காமராசரின் மறைவுக்குப் பின் அவருக்கு அனைத்து மரியாதைகளும் செய்ததோடு, சென்னை விமான நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கு அவர் திருப்பெயரைச் சூட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியொற்றி, அவர் பிறந்த நாளை “கல்வி வளர்ச்சி நாளாக” கடைப்பிடித்து அவரின் புகழுக்கு நாளும் மெருகேற்றும் இன்றைய கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அண்ணன் மு.க. ஸ்டாலின் தலைமையின் கீழ் பணியாற்றும் நான், மறைந்த தலைவர்களின் புகழுக்கு மாசு படிவதை எந்த வகையிலும் யார் செய்தாலும் ஏற்கும் மனநிலை கொண்டவனல்ல.

நாட்டு விடுதலைப் போரில் பல ஆண்டுகள் சிறையேகி, தியாகத் தழும் பேறி, முதலமைச்சராகவும், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் மக்கள் தொண்டாற்றி, எல்லோர் மனதிலும் தனித்த இடம் பிடித்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மீது மிகுந்த மரியாதையும் பெருமதிப்பும் கொண்டவன் நான்.

அண்ணா, கலைஞர், தளபதி வழியில் கண்ணியம் காக்கும் கடமை கொண்ட கழகத் தொண்டன்!

இந்த விளக்கத்தினை எல்லோரும் அன்புகூர்ந்து ஏற்று என் உரையில் நான் கூறிய செய்தியினை மேலும் விவாதப் பொருளாக்கிட வேண்டாம் என அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### ‘ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுப்புத் திட்டத்தில்

# மயிலாடுதுறையில் மக்களை நேரடியாகச் சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுப்பினர்களைச் சேர்த்தார்!

## இதுவரை ஒரு கோடியே 35 லட்சத்து 43 ஆயிரத்து 103 பேர் இணைந்தனர்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.7.2025) மயிலாடுதுறை மாவட்டம், மன்னம்பந்தல் ஊராட்சி, அம்பேத்கர் தெருவில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் மக்களை நேரடியாக சந்தித்து உறுப்பினர்களை சேர்த்தார்.

**மயிலாடுதுறை, ஜூலை, 18-**

**நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் மக்களை உறுப்பினர்களாக சேர்க்கும் “ஓரணியில் தமிழ்நாடு” என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கையை கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 3.7.2025 அன்று சென்னை, ஆழ்வார்பேட்டையில் மக்களை நேரடியாக சந்தித்து தொடங்கி வைத்தார்.**

அதனைத் தொடர்ந்து, 10.7.2025 அன்று திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சன்னதி தெருவில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், “ஓரணியில் தமிழ்நாடு”என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில், மக்களை நேரடியாக சந்தித்து, இத்திட்டத்தில் உறுப்பினர்களை சேர்த்தார்.

மேலும், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழக தகவல் தொழில்நுட்ப அணியால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை (War Room) 12.7.2025 அன்று கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் மக்களை உறுப்பினர்களாக சேர்க்கும் “ஓரணியில் தமிழ்நாடு” என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இணைக்கப்பட்ட மக்களின் விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்த கழகத் தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.7.2025) “ஓரணியில் தமிழ்நாடு” என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் மன்னம்பந்தல் ஊராட்சி, அம்பேத்கர் தெருவில் மக்களை நேரடியாக சந்தித்து உறுப்பினர்களை சேர்த்தார்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், மன்னம்பந்தல் ஊராட்சி மன்ற தலைவர் சூர்யா, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியச் செயலாளர் முருகமணி ஆகியோர் உடனிருந்தனர்.

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்பை ஏற்று “ஓரணியில் தமிழ்நாடு” என்ற மாபெரும் முன்னெடுப்புத் திட்டத்தில் இதுவரை 1,35,43,103 நபர்கள் இணைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

### இருதயக் குறைபாட்டை சரி செய்து

# சாதனை படைத்த சேலம் மருத்துவர்களுக்குப் பாராட்டு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!

*சேலம், ஜூலை 18-*

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு நபர்களுக்கு தலையீட்டு சாதனம் மூடல் மூலம் இருதய குறைபாட்டை சரி செய்து சாதனை படைத்துள்ளதை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு நபர்களுக்கு தலையீட்டு சாதனம் மூடல் மூலம் இருதய குறைபாட்டை சரி செய்து சாதனை படைத்துள்ளதையொட்டி மருத்துவர்கள் மற்றும் குணமடைந்தவர்களை நேற்று முன்தினம் (16.07.2025) நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

இதில் அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவ கட்டமைப்பினை தொடர்ச்சியாக மேம்படுத்திடும் வகையில் பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். வளர்ந்து வரும் நவீன காலத்திற்கேற்ப மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளார்கள்.

அந்த வகையில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் இருதயவியல் துறை சார்பில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு நபர்களுக்கு தலையீட்டு சாதனம் மூடல் (DEVICE CLOSURE) மூலம் இருதய குறைபாட்டை சரி செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இசைமதி (5 வயது) மற்றும் சபரிநாதன் (16 வயது) ஆகிய இருவரும் வென்ட்ரிகுலர் செப்டல் (VSD) குறைபாட்டினாலும், கௌதம் (15 வயது) மற்றும் சந்தியா (15 வயது) ஆகிய இருவரும் பேடன்ட் டக்டஸ் ஆர்டெரியோசஸ் (PDA), வள்ளி (27வயது) மற்றும் சுகுணா (32 வயது) ஆகிய இருவரும் ஏட்ரியல் செப்டெல் (ASD) குறைபாடு எனப்படும் இருதய நோயால் பாதிக்கப்பட்டு இருந்தனர்.

அவர்களது இருதய நோயானது எக்கோகார்டியோகிராபி மூலம் கண்டறியப்பட்டு அவர்களது இருதய குறைபாட்டின் அளவிற்கேற்ப தலையீட்டு சாதனம் கொண்டு கடந்த 12.07.2025 சனிக்கிழமை அன்று முழுமையாக சரிசெய்யப்பட்டது. இதன் மூலம் அவர்களுக்கு பிற்காலத்தில் இருதய செயலிழப்பு மற்றும் மாறுபட்ட இருதய துடிப்பு வராமல் தடுக்க முடியும் மற்றும் இயல்பான வாழ்க்கை வாழலாம்.

இந்த வகையான இருதய சிகிச்சை அளிப்பது இது இரண்டாவது முறையாகும். கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நான்கு குழந்தைகளுக்கு இதுபோன்ற இருதய சிகிச்சை அளிக்கபட்டது. இந்த முறை மூன்று குழந்தைகள் RBSK மற்றும் DEIC குழு மூலமாகவும், மூன்று பெண்கள் இருதய துறை புற நோயாளிகள் பிரிவு மூலமாகவும் கண்டறியப்பட்டு, இந்த உயரிய சிகிச்சை அளிக்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர். இந்த உயர்தர சிகிச்சையானது சிறப்பு மருத்துவர் குழுவினர், மயக்கவியல் துறை, இருதய அறுவை சிகிச்சை துறை, இருப்பு மருத்துவர் மற்றும் இருதய மருத்துவத்துறை மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக்குழு மூலம் வெற்றிகரமாக இருதய சிகிச்சை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தனியார் மருத்துவமனைகளில் ரூ. 2 இலட்சம் முதல் ரூ. 3 இலட்சம் வரை செலவாகும் இந்த சிகிச்சை, முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சிறப்புமிக்க சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட மருத்துவர்களுக்கும், குணமடைந்தவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.தேவி மீனா, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை சவேரா ஓட்டலில் 13.7.2025 அன்று நடைபெற்ற கோல்டன் சிட்டி அரிமா சங்கத்தின் 31-வது பதவி ஏற்பு விழாவில் சங்க நிறுவனர் அரிமா முரசாலி சிங்காரம் சர்வோதய இயக்க தொண்டர் எஸ்.திருநாவுக்கரசு அவர்களுக்கு குடும்ப நல நிதிக்காக 61 ஆயிரம் ரூபாய் வழங்கினார். உடன் சங்கத் தலைவர் அரிமா சார்லஸ், தலைவர் அரிமா டி.மகேந்திரன் ஆகியோர் உள்ளனர்.